BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# காணிக்காரர்களின் வாழ்வும் சமூக மாற்றமும்

பன்னீர் செல்வம் மா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம், திருவனந்தபுரம்-695581, மின்னஞ்சல்: pankumari2001@gmail.com

**ஆய்வு சுருக்கம்**

“காணிக்காரர்களின் வாழ்வும் சமூக மாற்றமும்” என்ற இக்கட்டுரையில், முற்காலங்களில் காணிக்காரர்களின் வாழ்வு எப்படி இருந்தது. தற்காலங்களில் எவ்வகையான வாழ்வியல் மாற்றங்களும், சமூக மாற்றங்களும் அவர்களிடையே உண்டாகியிருக்கிறது. அதற்கான காரணங்கள் என்னென்ன. நாம் என்ன செய்யவேண்டும் போன்றவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

**திறவுச்சொல்**

நாட்டு மக்கள், காலமூட்டு தம்புரான், விட்டு காட்டு தம்புரான், அஞ்சித்தான் தம்புரான், காட்டு மூட்டு தம்புரான், காணிக்காரர்

## முன்னுரை

தமிழ்நாட்டில் 42 வகையான பழங்குடி இனங்கள் உள்ளன. பழங்குடி மக்கள் தொகை 5,74,194 ஆகும். காணிக்காரர்கள் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் 49 ஊர்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 5 ஊர்களிலும் வாழ்கின்றனர். தமிழ்நாட்டைத் தவிர, கேரள மாநிலத்தில் திருவனந்தபுரம் மாவட்டத்தில் நெய்யாற்றின்கரை பகுதியிலும் இவர்கள் வாழ்கின்றனர். இக்கட்டுரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கீரிப்பாறை என்ற பகுதியில் கூவைகாடு மலை, வெள்ளாம்பி மலை என்ற 2 ஊர்களில் வாழும் காணிக்காரர்கள் குறித்த வாழ்வியலை இக்கட்டுரை ஆராய்கிறது. கூவைகாடு மலை தடிக்காரன்கோணம் என்ற பகுதியிலிருந்து 6 கி. மீ தொலைவில் உள்ளது. வெள்ளாம்பி மலை கூவை காடு மலையிலிருந்து 1 கி. மீ தொலைவிலிருக்கிறது. இவர்கள் தங்களை அல்லாத பிற மக்களை *‘நாட்டு மக்கள்’* என்று அழைக்கின்றனர். கூவைகாடு பகுதிதான் 48 செட்டில் இடங்களில் சிறிய பகுதியாகும். கன்னியாகுமரியில் வெள்ளாம்பி பகுதி தான் காணிக்காரர்களின் இறுதி எல்லைப் பகுதியாக உள்ளது. கூவைகாடு மலையில் 38 குடும்பங்களும், வெள்ளாம்பி மலையில் 180 குடும்பங்களும் உள்ளன.

## பூப்பு சடங்கு

இரு பகுதிகளிலும் ஒரு பெண் பூப்பெய்தியுடன் ஏழாம் நாளில் தண்ணீர் ஊற்றுவர். முற்காலங்களில் மாதவிடாய் சமயங்களில் மாதத்தின் ஏழு நாட்கள் அவர்களை ஒதுக்கி வைக்கும் பழக்கம் இருந்திருக்கிறது. இவ்வழக்கம் குறும்பர்களிடையேயும் காணப்படுவதாக (ப.154) ம. இராசேந்திரன் கூறுகிறார். தற்காலத்தில் இந்த பழக்கங்கள் எதுவும் காணப்படவில்லை. முற்காலங்களில் அனைவரும் ஒன்றாகச் சமைத்து உண்டு வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் தற்காலங்களில் பத்திரிக்கை அடித்து அனைவருக்கும் கொடுத்து, சாப்பாடு எத்தனை பேருக்கு என்று ஆர்டர் (order) செய்து சாப்பிடும் பழக்கம் இவர்களிடையே காணப்படுகிறது. இது நாட்டு மக்கள் கலப்பாலும், உலகமயமாக்கலினாலும் நடக்கிறது. நாட்டு மக்கள் ஒரு பெண் பூப்பு எய்தியவுடன் கையில் இரும்பு கொடுப்பார்கள். ஆனால் இவர்கள் துடைப்பத்தில் (வாரியல்) இருக்கின்ற சில குச்சிகளை எடுத்துக் கொடுக்கும் பழக்கம், நாட்டு மக்களிடமிருந்து மாறுபட்ட பழக்கமாக இருக்கிறது. மாமா சீர் கொடுக்கும் வழக்கம் முற்காலம் தொட்டு இக்காலம் வரை காணப்படுகிறது.



வெள்ளாம்பி - தகவலாளிகள் - ஸ்ரீரங்கன், பார்வதி, சரஸ்வதி, ஓமணா

**திருமணம் முறை**

கூவைகாடு மற்றும் வெள்ளாம்பி பகுதிகளில், முற்காலங்களில் தங்கள் சமுதாயத்தைத் தவிர நாட்டு மக்களைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் இல்லை. தங்களுக்குள்ளாக மட்டுமே திருமணம் செய்து கொள்வர். ஆனால் தற்போது நாட்டுப் பகுதிகளில் இருப்பவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் முறை நடைமுறையில் உள்ளது. உதாரணமாகக் கூவைகாடு பகுதியில் சௌமியா (காணி) என்பவர் நாட்டுப் பகுதியிலிருக்கும் ரூபீன்ஸ் என்பவரைத் திருமணம் செய்துள்ளார். உடன்போக்கு மேற்கொண்டவர்களுக்கு திருமண சடங்குகள் செய்யப்படுவதில்லை. பெற்றோர்களால் திருமணம் செய்து வைப்பவர்களுக்கு திருமண சடங்குகள் செய்யப்படுகிறது. முற்காலங்களில் பூப்பு எய்வதற்கு முன்பே திருமணம் பேசி வைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. இப்போது அப்பழக்கம் காணப்படவில்லை. முன்பு திருமணத்தின் போது நிலத்தைக் கொடுத்து அதில் வேலை செய்து அந்த நிலத்தின் பயனை உண்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். தற்போது வரதட்சணை அவர்களிடையே நிலவி வருகிறது. பொருளாதாரத்திற்கு ஏற்ப தாலி கட்டுதல் நடைபெறும். வசதி இருப்பவர்கள் தங்கத்தில் தாலி கட்டுவது. இல்லையெனில் கயிற்றில் தாலி கட்டுவர் இல்லையெனில் மஞ்சள் கயிறு மட்டும் கட்டுவது போன்றவை நிகழ்கிறது. இந்த தாலி காட்டும் பழக்கமானது மன்னான், ஊராளி, மலைப்புலையர், மலையரையர் (101) போன்ற பழங்குடிகளிடமும் காணப்படுவதாக ப. ஜெயகிருஷ்ணன் கூறுகிறார். முன்பு வேட்டியும் சேலையும் வசதிக்கேற்ப பயன்படுத்தப்பட்டது. சில வேளைகளில் பெண்கள் முண்டு (வேட்டி) கட்டியிருந்திருக்கின்றனர். இப்போது கோட்டும், பட்டு சேலையும் உடுக்கின்றனர். மண்டபத்தில் திருமண விழா நடைபெறுகிறது. இவையாவும் உலகமயமாக்கலினால் அவர்களிடையே நிலவும் மாற்றங்கள் ஆகும்.

**தெய்வங்கள்**

இரு ஊர்களிலுள்ள மக்களும், முற்காலங்களில் மலை தெய்வங்களையே (இயற்கை வழிபாடு) வழிபட்டு வந்திருக்கின்றனர். கூவைகாடு பகுதியிலுள்ளவர்கள், காலமூட்டு தம்புரான், விட்டு காட்டு தம்புரான், அஞ்சித்தான் தாம்புரான் போன்ற தெய்வங்களை வணங்கி வந்திருக்கின்றனர். இவர்கள் காணிக்காரர்களின் முன்னோர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்களுக்குக் கல் வைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். இது அவர்களுக்குள் நடுகல் வழிபாடாக மாறியிருக்கிறது. தற்காலத்தில் காளியம்மன், மாடன், இசக்கியம்மாள், வேலம் கொட்டம்மன், வாழையத்து மாடன் போன்ற ஊர் தெய்வங்களை வணங்கி வருகின்றனர். முன்பு இத்தெய்வங்களுக்கு வருடத்திற்கு ஒரு முறை திருவிழா எடுத்துக் கொண்டாடியுள்ளனர். இப்போது திருவிழா எடுக்கப்படுவதில்லை. மாறாகச் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் மட்டும் பூசை நடைபெற்று வருகிறது. வெள்ளாம்பி பகுதியில் 16 வகையான மலைத்தெய்வங்கள் உண்டு. தற்போது காட்டுமூட்டு தம்புரான் என்று மரத்தின் கீழிருக்கும் கல்லை (நடுகல்) வழிபடுகின்றனர். காளியம்மாள், நாகரம்மாள், சிவன், பிள்ளையார், மாடன், இசக்கியம்மாள், பத்ரகாளியம்மாள் போன்ற ஊர் தெய்வங்களுக்கு மே மாதத்தில் அனைவரிடமும் வரி வசூல் செய்து திருவிழா எடுத்துக் கொண்டாடுகின்றனர். *'ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் காணிக்காரர் அனைவரும் கூடிக் கோடை விழாக் கொண்டாடுவர்'* (222) என்று எட்கர் தர்ஸ்டன் கூறியதற்கு மாறாக இவர்கள் மே மாதத்தில் திருவிழா கொண்டாடுகின்றனர். காலநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.



கூவைகாடு- மலை கோவில்



வெள்ளாம்பி கோவில்

திருவிழாவிற்கு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு மலைக்கு போய் தங்களது

மலை தெய்வமான காட்டுமூட்டு தம்பூரானை வழிபட்ட பின்பே ஊர் தெய்வங்களுக்குத் திருவிழா எடுப்பர். *“அதியமான் இறந்ததும் ஔவை கசிந்து உருகிப் பாடிய புறநானூற்றுப் பாட்டில் ‘நடுகல்லில் பீலிசூட்டி, தெளிந்த மதுவைச் சிறுகலத்தில் ஊற்றவும் அதனைக் கொள்வனோ’* எனக் கூறுகிறாரே அது காணிக்காரப் பெண்களின் செய்கையை நினைவுறுத்தும்” (112) என்று ம. இராசேந்திரன் கூறுவது, அவர்களிடையே நடுகல் வழிபாடு (முன்னோர் வழிபாடு) இருந்ததை வெளிப்படுத்துகிறது. அது இப்போதும் தொடர்வதை நம்மால் காண முடியும். இவர்களின் வழிபாட்டில் சிவனின் மகனாகக் கருதப்படும் மாடனைத் தெய்வமாக கொண்டிருப்பதன் மூலம் சிவச்சார்பு நிலை இவர்களிடம் ஊடுருவியுள்ளதைக் காணமுடிகிறது.

**கல்வி நிலை**

கூவைகாடு பகுதியிலிருந்து பள்ளிக்கூடம் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. போன வருடம் (2025) வரை ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இலவசமாகப் பள்ளிக்கூடம் பேருந்தை விடுத்துள்ளது. ஆனால் இந்த வருடம் (2026) பேருந்து எதுவும் வராததால் சிறு பிள்ளைகள் நடந்தே பள்ளிக்கூடம் செல்லுகின்றனர். இதற்காக மனு கொடுத்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று வருத்தம் தெரிவிக்கின்றனர். *‘3 பேர் கல்லூரிக்கல்வி பெற்றவர்களாகவும் உள்ளனர். கல்லூரிக்கல்வி பெற்றவர்கள் பட்டங்கள் பெறவில்லை’* (63) என்று வே. சிதம்பரநாத பிள்ளை கூறுகிறார். ஆனால் இக்காலத்தில் கல்லூரியைத் தாண்டியும் படித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கூவைகாடு பகுதியில் சாமிலி என்ற பெண் சென்னை சென்று எல்எல்பி (LLB) படித்துக் கொண்டிருக்கிறாள். காணிக்காரர்களில் இவாஞ்சலின் ரேஷமா என்ற பெண் தான் முதன் முதலில் மருத்துவர் (Doctor) ஆனார். வெள்ளாம்பி பகுதியில் சிறு பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து பேருந்து வந்து கூட்டி செல்கின்றது. கல்லூரி வரை படித்த ஆண்களும் பெண்களும் இரு பகுதிகளிலும் இருக்கின்றனர். இக்குழந்தைகள் அனைவரும் அரசாங்க பள்ளிகளில் (Government School) மட்டுமே படிக்கின்றனர். தனியார்ப் பள்ளிகளில் படிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகவல்களிலிருந்து கல்வியில் காணிக்காரர்கள் முன்னேற்றம் அடைந்துள்ளதை நம்மால் காண முடியும். மேலும் பேருந்து வசதியை அரசு ஏற்படுத்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும். கல்வியில் இவர்களை மேம்படுத்த இன்னும் பல முயற்சிகளை அரசு மேற்கொள்ளலாம்.

தொழில்

இருபகுதிகளிலுள்ள இளைஞர்கள் பெரும்பாலும் கட்டிட வேலைகளுக்கும், ரப்பர் தோட்டங்களில் பால் எடுக்கும் தொழிலுக்குச் செல்கின்றனர். ஒரு சிலர் வெளிநாடுகளில் வேலை செய்து வருகிறார்கள். தற்கால இளைஞர்களில் சிலர் குடி போதைக்கு அடிமையாக இருக்கிறதாகவும் பெரியவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். வெளியூருக்குச் சென்று வேலை செய்தும், படித்தும் வருகின்றனர். வெளியூரில் வேலை பார்க்கச் சென்றதில் சிலர் அங்கேயே திருமணத்தை முடித்து நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். சிலர் மட்டுமே சொந்த ஊருக்கு வருகின்றனர். இதனால் காணி இனம் அழிந்து வருவதாகப் பெரியவர்கள் கூறுகின்றனர். இது உலகமயமாக்கலினாலும், நாட்டு மக்களின் கலப்பாலும் நிகழ்கிறது. கல்லூரி வரை படித்த பெண்களும் ஆண்களும் நாகர்கோவில், சென்னை போன்ற இடங்களுக்குச் சென்று நகை மற்றும் துணிக் கடைகளிலும் வேலை செய்து வருகின்றனர். வெள்ளாம்பி பகுதியில் ஒருவர் அரசாங்க வேலை பார்க்கிறார். கல்லூரி வரை படித்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் அரசாங்க வேலை கிடைக்கவில்லை. அரசாங்கம் வேலை வாங்கி கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கோரிக்கைகளையும் வைக்கின்றனர். இவர்களுக்கென்று அரசு ஒதுக்கிய வேலைகளை வேறு பிரிவினரோ அல்லது மக்களோ வாங்குகிறார்களா என்பதை அரசு கவனிக்க வேண்டும். ஏனென்று *‘காணியான் என்ற மலையின மக்கள், தாங்கள் காணிக்காரர்கள் என்று கூறிக் காணிக்காரர்களின் வேலைவாய்ப்பினை ஏமாற்றிப் பெற்றுவிடுவதாகக் கூறுகிறார்கள்’* (63) என்று வே. சிதம்பரநாத பிள்ளை கூறுவதிலிருந்து அறியலாம். இதே போல் பழங்குடி மக்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மற்றும் உரிமைகளைப் பிறர் வாங்குவதாக *‘உண்மையான பழங்குடிகள் செத்துக் கொண்டிருக்க, போலிகள் வாழ்க்கையோ சொகுசாக!’* என்ற கட்டுரையில் சந்திரமோகன்

கூறுகிறார். ஆகவே அரசு தீர விசாரித்தே வேலை கொடுக்க வேண்டும். இதற்கென்று ஒரு குழுவை நியமித்து கண்காணிக்கலாம். இதனால் காணிக்காரர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவர்.

**பழக்கவழக்கம்**

அடி, திருட்டு போன்ற குற்றங்களை யாரேனும் செய்தால் கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. எ. கா குற்றம் செய்தவர் முதுகில் பெரிய கல்லை வைத்துக் குனிந்து நிற்க வேண்டும். யாரேனும் குற்றம் செய்து தப்பித்தால் தெய்வம் அவர்களைப் பழிவாங்கி விடும் என்று நம்பிக்கை அவர்களிடையே நிலவி வந்திருக்கிறது. கற்பழிப்பு அவ்விடங்களில் முற்காலம் தொட்டு இக்காலம் வரை நடந்ததில்லை. இரு பகுதிகளிலுள்ள அனைவருக்கும் அவர்களின் பெயருக்குப் பின்னால் *‘காணி’* என்ற பெயர் வந்து விடும். அது அவர்களின் அடையாளம் என்றும் கூறுகின்றனர். (எ. கா) – நாராயணன் காணி, பிரேமா காணி, சந்துருகாணி. ஆனால் கூவைகாட்டிலுள்ள பலருக்கும் தங்களைக் காணி என்று அடையாளம் காட்டுவது பிடிக்கவில்லை என்கின்றனர். ஏனெனில் காணி என்ற பெயரால் பிறர் தங்களை இழிவாகப் பார்ப்பதாக கூறுகின்றனர். இரு பகுதிகளிலும் சில பெரியவர்களுக்கு மட்டுமே பழமொழிகள், விடுகதைகள் போன்றவை தெரிந்துள்ளது. கேட்கும் போது, மறந்து விட்டது என்றும் பேசிக் கொண்டிருக்கும் போது மட்டுமே சில வேளைகளில் வரும் என்றும் கூறினர்.



கூவைகாடு மலை-தகவலாளி - நாராயணன்



கூவைகாடு மலை தகவலாளி - பிரேமா

முன்பு குழந்தைகளுக்கு மரத்தில் பொம்மைகள், குச்சிகள் போன்ற கைவினைப் பொருட்களைச் செய்து கொடுத்திருக்கின்றனர். இப்போது அவைகள் செய்யப்படுவதில்லை. தற்கால இளைஞர்களுக்குப் பழமொழி, விடுகதைகள், கைவினைப் பொருள்கள் செய்வது போன்றவை தெரியவில்லை. இம்மக்களிடமிருந்து இவை அழிந்து வருகின்றன. உலகமயமாக்கலும், ஊடகங்களும் (வாட்சப், இன்ஸ்டாகிராம், யூடியூப்...) தான் இதற்குக் காரணம் என்கின்றனர். இரு பகுதியினரும் நாட்டு மக்களுக்கு தங்கள் நிலத்தைக் கொடுப்பதில்லை. *‘காணிக்காரரிடையே இல்லங்கள் என்ற உட்பிரிவுகள் உள்ளன’* (220) என்று எட்கர் தர்ஸ்டன் கூறிய உட்பிரிவுகள் இப்போதும் அவர்களிடையே காணப்படுகிறது. வெள்ளாம்பி பகுதியிலிருக்கும் மக்களுக்குள் எந்த பிரச்சனையும் உண்டாவதில்லை. ஆனால் நாட்டு பகுதியிலிருந்து பெண் கட்டி வந்திருப்பவர்களால் பலவிதமான பிரச்சனைகள் ஏற்படுவதாகக் கூறுகின்றனர். தங்களது கலாச்சாரத்தை அப்பெண்கள் விரும்புவதில்லை. அதற்கு பழகுவது அவர்களுக்குக் கடினமாக

இருக்கிறதாகவும், அவர்களது கலாச்சாரத்தை இங்கே வந்து பரப்புவதாகவும் கூறுகின்றனர். மேலும் இங்குள்ள பெண்கள் (காணிக்காரப் பெண்கள்) முண்டும் சட்டையும் மட்டுமே அணிகின்றனர். இதனை அப்பெண்கள் (நாட்டுப் பெண்கள்) இழிவாகக் காண்கின்றனர் என்றும் கூறுகின்றனர். சிலர் நாட்டு மக்களின் கலாச்சாரத்தை இங்குப் பின்பற்றுகின்றனர். இதனால் சிலர் சுயநலமாக மாறிவருகின்றனர் என்றும் கூறுகின்றனர். எ.கா - இங்கு சரஸ்வதி என்பவர் தோசை மாவு அரைத்து அதனை விற்பனை செய்யும் சொந்த தொழிலைச் செய்து வருகிறார். தற்போது இவரின் கிரைண்டர் செயலிழந்துவிட்டது. ஜூன் மாதத்தில் ஆட்சியர் (Collector) அப்பகுதிக்கு வந்துள்ளார். தங்களிடம் இத்தனை ஆடுகள், இத்தனை கோழிகள் உண்டு என்று அவரிடம் கணக்குக் காட்டி, அவைகளுக்கான கூடும், பணமும் கேட்டுப் பெற்றுக்கொண்டுள்ளனர். அவரவர் தேவையை, பிரச்சனையை மட்டுமே கூறியதாகவும், தன் தேவையைக் குறித்து கூறாது சுயநலமாக இருந்ததாவும் சரஸ்வதி வருத்தம் தெரிவித்தார்.

**அரசு செய்த பணி**

மலையில் தான் இவர்கள் வாழ்விடங்கள் இருந்திருக்கின்றது. வாழ்வாதாரங்களுக்காக மலையின் கீழ் நோக்கி வந்திருக்கின்றனர். முன்பு இருந்த ஓடை, சிறுகுளம் போன்றவை கால மாற்றத்தால் வற்றிவிட்டது. ஆகவே கிணறு தோண்ட ஆரம்பித்திருக்கின்றனர். பின்பு அரசாங்கம் இவர்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்திருக்கிறது. ஆனால் பல குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. பொதுவாக அரசாங்கம் கட்டிய கிணற்றில் மட்டுமே தண்ணீர் இருக்கிறது. அதையே பயன்படுத்துகின்றனர். அரசு பல வசதிகள் செய்து கொடுத்தாலும் அதனை அடிக்கடி பார்வையிட்டால் ஏற்பட்ட பழுதினை மாற்ற முடியும். BSNL SIM மட்டுமே இங்குச் செயல்படும். வேறு சிம் (SIM) உபயோகப்படுத்த முடியாது. முற்காலங்களில் மின்சார வசதி இல்லை. தற்போது மின்சார வசதியை அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. முன்பு மண்ணாலான சாலையே இருந்தது. இரு பகுதிகளிலும் கான்கிரீட் சாலை வந்துவிட்டது. இதனால் வாகனங்கள் ஓட்டுவதற்கு வசதியாக இருக்கிறது என்கின்றனர். முன்பு அனைவரும் கூரை வீடுகளில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். விவசாய நிலத்தில் கிழங்கு, சாமை போன்றவற்றை விதைக்கும் நேரங்களில் மூங்கில் மரங்களில் வீடு கட்டி வாழ்ந்து வந்துள்ளனர். அறுவடைக் காலங்களில் யானை, மிலா போன்ற விலங்குகளை விரட்டுவதற்காக வில் அம்புகளைத் தயாராக வைத்திருப்பார்கள். இந்த செய்தி கும்கி திரைப்படத்தை நினைவுபடுத்துகிறது. பயிரினை காட்டு யானையிடமிருந்து பாதுகாக்கக் கும்கி யானையை அழைக்கும் முற்கால பழங்குடி வாழ்வைக் காட்டுகிறது.

கூவைகாடு பகுதியில் தற்போது, வீடு கட்ட (கான்கிரீட் வீடு) மூன்றரை லட்சம் அரசாங்கம் கொடுக்கிறது. ஆனால் அதில் சில ஆயிரத்தைச் சிலர் அபகரிப்பதாகவும், அதை வைத்து நல்லதொரு வீட்டைக் கட்ட முடிவதில்லை என்றும் கூறுகின்றனர். சிலரின் வீடு கட்டி முடிக்கப்படாமல் பாதியிலேயே நிற்கிறது. அரசாங்கம் கொடுக்கும் பணத்தோடு நாங்களும் பணம் போட்டு வீடு கட்டினால் மட்டுமே நல்லதொரு வீட்டை கட்டி முடிக்க முடிகிறது. *'மீதி பணத்திற்கு எங்கே செல்வோம்'* என்று வருத்தம் தெரிவிக்கின்றனர். அரசாங்கம் மேலும் பணம் கொடுத்தால் நல்லதொரு வீட்டைக் கட்டி அதில் குடியிருப்போம் என்றும் கூறுகின்றனர். ஆனால் வசதி உள்ளவர்கள் சிறிது பணம் செலுத்தி வீடு கட்டி முடிக்கின்றனர். ஆனால் இன்றும் சில வீடுகள் சீட்டு வீடுகளாகவே இருப்பதைப் பார்க்க முடிகிறது. வெள்ளாம்பி பகுதிகளில் சிலருக்கு அரசாங்கம் வீடு கட்டி கொடுத்திருக்கிறது. சிலர் சொந்தமாகவே வீடு கட்டி இருக்கின்றனர். இரு பகுதிகளிலும், தக்கலைக்கு அருகில் உள்ள மிளகு மூடு என்ற பகுதியிலிருந்து ஒரு நபர் வந்து கைத்தொழில், மண்பானை செய்வது போன்றவற்றைச் சொல்லிக் கொடுத்துள்ளார். தடிக்காரன்கோணத்தில் மாவட்ட ஆட்சியர் மூலமாகக் கூடை பின்னும் பயிற்சி இவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அத்தொழிலை கற்றும் இருக்கின்றனர். *'கற்றுக் கொண்டாலும் விற்பனை வியாபாரத்திற்கு நாங்கள் தான் அலைந்து விற்க வேண்டுமே தவிர, அதனை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை'* என்று ஓமணா

(தகவலாளி) வருத்தம் தெரிவித்தார். இவற்றை அரசாங்கம் ஏற்று நடத்தினால் எங்களுக்கு லாபம் கிடைக்கும். அரசாங்கம் இதை ஏற்று நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அரசு பல உதவிகளையும் நலத்திட்டங்களையும் செய்தாலும் முறைப்படி செய்து அவர்களுக்கு லாபத்தை ஈட்டுவதாக இருக்க வேண்டும். அரசு இந்த கைத்தொழில்களை முன்னெடுத்து நடத்தினால் பலர் பயன் பெறுவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**இறப்பு சடங்கு**

இரு பகுதியினரும் இறந்தவர்களைத் தென்னை ஓலையில் வைத்து, வாக்கரிசி போடுவார்கள். முற்காலங்களில் இறந்தவர்களை எரிப்பதாகக் கூறுகின்றனர். கூவைகாடு பகுதியில் இப்போதும் இவ்வழக்கம் தொடர்கிறது. 15 வயதிற்குட்பட்ட சிறு பிள்ளைகளை எரிப்பதில்லை. அவர்களைப் புதைக்கின்றனர். ஏனெனில் சிறு பிள்ளைகள் *'தெய்வத்திற்கு சமம்'* என்று அவர்கள் நம்புகிறார்கள். அவரவர் சொந்த நிலத்திலேயே இறந்தவர்களை எரிக்கின்றனர். ஆனால் வெள்ளாம்பியில் முற்காலங்களிலிருந்த எரிக்கும் வழக்கத்தை விடுத்துப் புதைக்கும் வழக்கத்தைப் பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றனர். அதற்கான காரணமாகச் சிலர் இறக்கும் தருவாயில் இருக்கும்போது, என்னை எரிக்க வேண்டாம் புதைக்க வேண்டும் என்று தனது கடைசி ஆசையைச் சொன்னதாகவும் அதனால் புதைத்ததாகக் கூறுகின்றனர். சரியான காரணம் அவர்களுக்குத் தெரியவில்லை. நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் மதம் மாறி இருக்கிறார்கள் என்று கூறுகின்றனர். சில வருடங்களுக்கு முன்பு இரண்டு பேர் இறக்கும் போது தனது கடைசி ஆசையாகத் தன்னை எரிக்க வேண்டும் என்று கேட்டதால் அவர்களை மட்டும் எரித்துள்ளதாகக் கூறினர். கூவை காடு பகுதியில் இரண்டு குடும்பங்கள் மட்டுமே திருச்சபைக்குச் செல்கின்றனர். வெள்ளாம்பியில் ஒரு திருச்சபை இருக்கிறது. கிறித்தவத்திற்கு மாறியவர்கள் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். ஆகவே இவர்களும் அவ்வழக்கத்தைப் பின்பற்றி புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று நமக்குத் தோன்றினாலும், பிணத்தைப் புதைத்தல் எரித்தல் என்று இரு முறைகளைக் காணிக்காரர்கள் கையாண்டதாக எட்கர் தர்ஸ்டனும் (229), கேரளப் பழங்குடிகள் கையாண்டதாக ப. ஜெயகிருஷ்ணனும் (111) கூறுவதைக் கவனிக்க வேண்டும். ஏன் இவர்கள் புதைத்தல் எரித்தல் என்ற இரண்டையும் செய்கின்றனர் என்பதற்கான காரணத்தை அவர்கள் கூறவில்லை. ஆகவே முற்காலம் தொட்டு இவர்களிடம் இவ்விரண்டும் காணப்பட்டு வந்திருக்கிறது என்பது உறுதியாகிறது. ஆனால் இருளப்பள்ளர் என்ற வெட்டக்காடு இருளர் புதைக்கும் வழக்கத்தை மேற்கொள்கின்றனர் (நா. வானமாமலை, 106).

**முடிவுரை**

ட்ரைபெட் (TRIFED), பழங்குடிப் பொருட்களின் வணிக விற்பனைக்காக மீசோ (Meesho) மற்றும் ரிலையன்ஸ் ரீடெய்ல் (Reliance Retail) போன்ற முக்கிய நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது வரவேற்கத்தக்கது. இதில் பழங்குடி மக்களின் பல கைவினைப் பொருட்களைக் காணலாம். மீசோ வில் Tribal என்ற வார்த்தையைச் செலுத்தினாலே போதும் Tribal Wall Decor, Tribal Saree....என்று அவர்களின் கைவண்ணம் வந்துவிடும். ஆனால் இது பலருக்கும் தெரிவதில்லை. ஆதலால் இதில் சில விளம்பரங்களை அரசு மேற்கொண்டு மக்கள் கவனத்தைப் பெறலாம். ஆதி மகோத்சவம் என்பது TRIFED-இன் முதன்மையான வருடாந்திர தேசிய பழங்குடியினர் விழாவாகும். இது 29.06.2026 முதல் 08.07.2026 வரை அகமதாபாத், வஸ்த்ராபூரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அகமதாபாத் ஹாட்டில் (Ahmedabad Haat) இந்த வருட ஆதி மகோத்சவம் நடைபெற்றது. இதில் அதிகமாக வட இந்திய பழங்குடியினரின் உணவுகள், கைவினைப் பொருட்கள்... அதிகமாக இடம்பெறுகின்றன தவிரத் தென்னிந்தியப் பழங்குடியினர்களின் உணவுகளோ, கைவினைப் பொருட்களோ குறைவாகவே இடம்பெறுகிறது என்பது வருந்தத்தக்கது. முக்கியமாக தமிழ்நாடு பழங்குடிகளின் பங்களிப்பு குறைவாக இருக்கிறது. இவர்களின் படைப்புகளை இந்திய அளவில் கொண்டு வரத் தமிழ்நாடு அரசு முயற்சிகளைச் செய்ய வேண்டும். இதனால் நம் நாட்டி அழிந்து வரும் பழங்குடிகளின் படைப்புகளை அழியாமல் பாதுகாக்கலாம். TRIFED, தனது 'டிரைப்ஸ் இந்தியா' (Tribes

India) என்ற பிராண்டின் மூலம், நாடு முழுவதும் 117 விற்பனை நிலையங்களையும், www.tribesindia.com என்ற இணையவழி வர்த்தகத் தளத்தையும் நிறுவியுள்ளது. இந்த முயற்சி, பழங்குடியினரின் தயாரிப்புகளை உலகளாவிய பார்வையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதோடு, மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே பழங்குடியின கைவினைஞர்களை ஆதரிக்கவும் உதவுகிறது என்பது வரவேற்கத்தக்கது. நம் நாட்டின் இந்தியக் குடியரசுத் தலைவரான திரௌபதி முர்மு ஒடிசா மாநிலத்திலுள்ள சாந்தால் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இந்திய பழங்குடிகளுக்கு மாதிரியாகத் திகழ்ந்து வருகிறார் என்பது நம் நாட்டில் பழங்குடிகளின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

பழங்குடியினர்களின் பிரச்சனை, தேவைகள் குறித்ததான திரைப்படங்கள் குறைவாகவே வருகிறது. மேலும் பள்ளிக்கூடம் மற்றும் கல்லூரி பாடத்திட்டங்களில் பழங்குடியினரைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். கேரளாவில் 'அய்யப்பனும் கோஷியும்' திரைப்படத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள அட்டப்பாடி பகுதியைச் சேர்ந்த இருளர் பழங்குடி இனப்பெண் நஞ்சியம்மா என்பவர் பாடிய *"களக்காத்த சந்தனமேறம்..."* என்ற நாட்டுப்புறப் பாடலுக்காக 2022-ஆம் ஆண்டு இந்திய அரசு சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதை வழங்கியுள்ளது பாராட்டத்தக்கது. இதுபோன்று வாய்ப்புகளை அவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் திறமைகளை வெளிக்கொண்டு வரலாம். அவர்களின் கை வண்ணங்கள், கைவினைப் பொருட்கள், நடனம், பாடல்கள்...... போன்றவற்றை நாம் பாதுகாக்க முடியும்.

இக்கட்டுரையிலிருந்து காணிக்காரர்களின் வாழ்வியலையும் சமூக மாற்றங்களையும் நம்மால் காண முடியும். பூப்பு சடங்கு, திருமண முறை, பழக்கவழக்கம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்களை நம்மால் காண முடியும். அவர்கள் வழிபாட்டில் சிவா சார்பு நிலையை நம்மால் காண முடியும். கல்வியில் பல முன்னேற்றங்களைக் காணலாம். படித்தவர்களுக்கு நல்லதொரு வேலையை அரசு வாங்கி கொடுத்தால் அவர்கள் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மருத்துவ வசதிகள் இன்னும் அதிகமாக அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவில் எடுக்க வேண்டும். அவர்களுக்கென்று அரசு நியமித்திருக்கிற சலுகைகள், உரிமைகளைப் பிறர் அபகரிக்காமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். பயிற்சி கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்த வேண்டும்.

**தகவலாளிகள்**

கூவை காடு மலை - நாராயணன் (72) – பூசாரி, ஐயப்பன் (72) மந்திரவாதி, பிரேமா (36), சௌமியா (26), சாமிலி (18), அசுவினி (16)

வெள்ளாம்பி மலை - ஸ்ரீரங்கன் (78), பார்வதி (76), சரஸ்வதி (57), ஓமணா (57), தினேஷ் (23), சந்துரு (23)

**துணைநூற் பட்டியல்**


1. இராஜேந்திரன், மா., மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள் - அடையாளம், திருச்சி, 2014
2. எட்கர் தர்ஸ்டன், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் (தொகுதி மூன்று), தமிழ்ப் பல்கலைக்கழகம் மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் – 2005
3. சிதம்பரநாத பிள்ளை, வே., மலைவாசம், அகல், சென்னை, ஜூன் 2013
4. வானமாமலை, நா., மக்களும் மரபுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, பிப்ரவரி 2022
5. ஜெயகிருஷ்ணன், ப. சங்க இலக்கியமும் கேரளப் பழங்குடிகளும், பல்லவி பதிப்பகம், ஈரோடு, 2017

**கட்டுரை**

- சந்திரமோகன் - உண்மையான பழங்குடிகள் செத்துக் கொண்டிருக்க, போலிகள் வாழ்க்கையோ சொகுசாக! – 24 நவம்பர் 2015


*****